7/2020

# திருவள்ளூர் நகராட்சி
## சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

திருத்திய 1920ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் அட்டவணை III விதி 2(1)ன் கீழ் திருவள்ளூர் நகர் மன்றத்தின் சாதாரணக் கூட்டம் திருவள்ளூர் நகர் மன்ற கூடத்தில் 30.07.2020 –ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் கீழ்கண்ட பொருட்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட முடிவு செய்யப்பட்டது.

## நகர் மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்:1**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுலை 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்:–1025 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:2**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுலை 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–1026 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:3**

இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஜுலை 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–1027 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:4**

மருத்துவ கல்லூரி திறப்பு விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் வருகையினையொட்டி திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக நுழைவு வாயிலில் இருந்து அலுவலக சாலை முடியும் வரை இருபுறமும் செடிகள் அமைத்து பாதுகாப்பு வளையம் பொருத்தும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1292/2020/இ1)

**தீர்மான எண்:–1028 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:5**

இவ்வாண்டு பிப்ரவரி மார்ச் 2020 முதலே தமிழகமெங்கும், கொரோனா தொற்று ஏற்பட்டு நாளது தேதி வரை தொடர்ந்து தொற்று அதிகமாகி வருவதால், அது குறித்த அறிக்கைகள், இந்நகராட்சியில் தினசரி பெறப்படும் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர்களின் விவரம் தொடர்ந்து எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள், அதற்கான முன்னேற்ற அறிக்கைகளை தினந்தோறும் காலை மற்றும் மாலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள், மாவட்ட ஆட்சித்

தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோருக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருவதுடன் அதற்கான எழுது பொருட்கள், படிவங்கள் நகல் எடுக்க தேவையான டோனர்கள் போன்றவை வெகுமளவு தேவைப்படுவதுடன், இந்நகராட்சிக்கு 2020–21–ம் ஆண்டிற்கு தேவையான மேற்கூறிய எழுது பொருட்கள், படிவங்கள் பதிவேடுகள் வெள்ளைத் தாள்கள் 'A4' அளவு மற்றும் Full Scale போன்றவைகளும் வாங்க வேண்டியுள்ளதால் அதற்கான விலைப்புள்ளிகளை கோருவதற்கான நடவடிக்கைகளுக்கு உத்தேச செலவினம் ரூ.10.00/– இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் தினந்தோறும் கோரப்படும் அரசு அறிக்கைகள் மற்றும் மேற்குறிப்பிட்ட உயர் அலுவலர்களுக்கு காலதாமதமின்றி அறிக்கைகள் அனுப்பும் பொருட்டு, அதற்குரிய எழுது பொருட்களை அனைத்து பிரிவு எழுத்தர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு அவர்களது தேவைக்கேற்ப வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/J1, நாள்.23.03.2020 மற்றும் நாளது தேதி வரை செயல்முறைகள் மூலம் பிறப்பிக்கப்படும் உத்திரவின்படி பணியாற்றிடவும் நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:–1029 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

<u>பொருள் எண்:6</u>

திருவள்ளூர் நகராட்சியில் "கொரானா வைரஸ்" (COVID-19) தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்து வகையில் ஆட்டோவில் ஒலி பெருக்கி மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் கபசுர குடிநீர் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே அனைத்து வார்டு பகுதிகளிலும் மேற்படி பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு, தமிழக அரசு ஆணை எண். 74/53 (MA) Finance (Salaries) 2020 நாள்.01.04.2020 – ன்படி முதல் கட்டமாக உத்தேச செலுவீனம் ரூ.19.80 இலட்சத்திற்கு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ள குறுகிய கால விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அளிக்கலாம்

(ந.க.எண்.1704/2020/அ1)

**தீர்மான எண்:–1030 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்:7</u>

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் அரசு மருந்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் பல்வேறு அரசு திட்டப் பணிகள் துவக்கி வைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வருகையை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகப்பகுதியில் மரக்கன்றுகள் நடவு செய்து அரசு மருத்தும் பணிகள், மாவட்ட ஆட்சியரின் சிறப்பு நிதியில் (2015–2016) இருந்து ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி மாவட்ட ஆட்சியரின் 18.02.2020 நாளிட்ட கடிதத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிகளை பத்து தினங்களுக்குள் முடித்து பணி முடிவு அறிக்கை அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி மாண்புமிகு முதலமைச்சரின் வருகை ஒத்தி வைக்கப்பட்டதாலும், அதனைத் தொடர்ந்து மார்ச் 2020 முதல் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு ஊரடங்கு உத்திரவு அமுலில் இருந்ததால் அப்பணிகள் நடைபெறாத நிலையில், தற்போது திட்ட இயக்குநர்/இணை இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவள்ளூர் தனது 25.06.2020 நாளிட்ட கடிதத்தில் பணி முடிவறிக்கை அனுப்பி வைக்குமாறு கேட்டு கொண்டுள்ளார். தற்போது 144 தடை உத்திரவு அமுலில் உள்ளதால் மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ளுவதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதால் உடனடியாக உள்ளூர் விலைப்புள்ளி கோரி ஒரு ஒப்பந்ததாரரை நியமித்து மேற்படி பணியினை முடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

மேலும் மேற்படி செலவினத்தை மாவட்ட ஆட்சியரின் சிறப்பு நிதி (2015–2016)–ல் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.674/2020/இ1)

**தீர்மான எண்:–1031 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:8**

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் அரசு மருந்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் பல்வேறு அரசு திட்டப் பணிகள் துவக்கி வைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வருகையை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகப்பகுதியில் மரக்கன்றுகள் நடவு செய்து அரசு மருத்துவ பணிகள், மாவட்ட ஆட்சியரின் சிறப்பு நிதியில் பணி மேற்கொள்ள 3.07.2020 விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| SL.No | Qty | Description | Rukmani Constructions | | | P.Venugopal | | | Arunai Engineering Works | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate | Unit | Amount | Rate | Unit | Amount | Rate | Unit | Amount |
| 1 | 600.00 | Site.Removal of Excess Earth work | 55.00 | sq.m | 33000.00 | 56.00 | sq.m | 33600.00 | 54.60 | sq.m | 32760.00 |
| 2 | 260.00 | Supply and fixing barbed wire fencing | 94.00 | sq.m | 24440.00 | 95.00 | sq.m | 24700.00 | 93.50 | sq.m | 24310.00 |
| 3 | 300.00 | Earth work open excavation in all soils | 71.00 | sq.m | 21300.00 | 71.50 | sq.m | 21450.00 | 70.50 | sq.m | 21150.00 |
| 4 | 1.00 | Supply and providing saplings | 350100.00 | 1No | 350100.00 | 350150.00 | 1No | 350150.00 | 350000.00 | 1No | 350000.00 |
| 5 | 1.00 | Supply and placing plants | 360100.00 | 1No | 360100.00 | 36150.00 | 1No | 360150.00 | 360000.00 | 1No | 360000.00 |
| 6 | 1.00 | Supplying and fixing with good grity red gravel | 471.00 | 1No | 471.00 | 472.00 | 1No | 472.00 | 470.00 | 1No | 470.00 |
| 7 | 1.00 | Maintenance and watering for the plantation | 104010.00 | 1No | 104010.00 | 104012.00 | 1No | 104012.00 | 104000.00 | 1No | 104000.00 |

மேற்படி வரப்பெற்ற ஒப்புநோக்கு பட்டியலை ஒப்பிடுகையில் M/s.Arunai Engineering Works என்ற நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளியினை அளித்துள்ளதால் அந்நிறுவனத்தாருக்கு அவசர அவசியம் கருதி, முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு;-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண். 674/2020/ இ1 )

**தீர்மான எண்:–1032 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:9**

பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN20CQ1029 வாகனம் தகுதி சான்று எடுக்கும் பொருட்டு மாற்றாக டிராக்டர் டிரைவருடன் வாடகைக்கு அமர்த்தும் பொருட்டு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பொருளடக்கம் | Sri Sai Ram Enterprises | Agroo Engineering Service | குறைந்த விலைப் புள்ளி |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | டிராக்டர் ட்ரைலர் மூலம் குப்பைகளை அகற்றிட (டிரைவர் மற்றும் டிராக்டர் ட்ரைலர் மற்றும் டீசல் ஆயில் உட்பட 1 நாளைக்கு) | ரூ.2400/– | ரூ.2500/– | Sri Sai Ram Enterprises, Tiruvallur |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மேற்குறிப்பிட்டுள்ளவாறு குறைந்த விலைப்புள்ளி அளித்த Sri Sai Ram Enterprises, Tiruvallur என்றநிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. வாகன பயன்பாட்டிற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. கொரோனா வைரஸ் தொற்று நோய் அவசர கால பணி என்பதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.644/2020/எச்1)

**தீர்மான எண்:–1033 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:10</u>**

திருவள்ளூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் வாகனம் TN20 K4021க்கு தகுதி சான்று காலம் 20.08.2020 அன்று முடிவடைய இருப்பதால், மேற்படி வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய தகுதி பெற்ற பணிமனையின் மூலம் மேற்படி பணியினை செய்து, சாலை போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று மற்றும் புகையில்லா சான்று பெற்று தந்திடும் வகையில், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1) பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.990/2020/எச்1)

**தீர்மான எண்:–1034 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:11</u>**

மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் மற்றும் தமிழக அரசின் ஆரோக்கியம் அரசாணை எண் 201–ல் பரிந்துரைக்கப்பட்ட கொரோனா நோய் தொற்றுக்கான நோய் எதிர்ப்பு திறனை அதிகரிக்கும் ஹோமியோபதி மருந்திற்கான, குறைந்த விலைப்புள்ளியினை அளித்த Dr.T.Arumugam, P.M. Apartments, No.11, Bhaktha vatchalam Street, West Tambaram. Chennai -40 என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியதன் பேரில் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ.50,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. கொரோனா வைரஸ் நோய் எதிர்ப்புதிறனை அதிகரிக்க அவசரம், அவசியம் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.644/2020/எச்1)

**தீர்மான எண்:–1035 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:12</u>**

கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்களுக்காக கிருமி நாசினி தெளித்தல் பணிக்கு, Eco Clean 50+ மருந்து இயற்கை முறையில் தயாரிக்கப்படுவதால் அதனை குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனமான "Shri Sakthi Agency Ganapathy Nagar, Erode -க்கு பணி உத்தரவு வழங்கிடவும் 200 லிட்டர் சப்ளை செய்திடவும் அதற்காகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி அளிக்கப்படுகிறது.

2. செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்:–1036 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:13**

இந்நகராட்சி பகுதிகளில் தினசரி உருவாகும் திடக் கழிவுகளை அகற்றும் பணிக்காக பயன்படுத்தப்படும் கனரக வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்களுக்கு சாலை வரி, பசுமை வரி மற்றும் காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்துவதற்கும், வாகனங்களில் உள்ள சிறு பழுது நீக்கி சீர் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், புதியதாக டயர், டியூப்கள் வாங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதியும் அதற்குண்டான 2020–21ஆம் ஆண்டு உத்தேச செலவு தொகை ரூ.4.50 லட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் அதற்கான செலவினங்களை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2092/2013/எச்1)

**தீர்மான எண்:–1037 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:14**

திருவள்ளூர் நகராட்சியில், 2020–2021 –ம் ஆண்டு பொது நிதி கீழ் பணிகள் மேற்கொள்ள 03.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்பெயர் | மதிப்பீடு வீதம் சதவிகிதத்தில் குறைவு/அதிகம் மதிப்பீடு தொகை குறைவு/அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தகுதி ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் சர்வர் ஆண்டு பராமரிப்பு பணிகள் | 4.50 | M/s.THUKKARAM COMPUTERS | 0.19% குறைவு | M/s.THUKKARAM COMPUTERS |
| | | | M/s.KANISH SYSTEMS | 0.31% அதிகம் | |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிடுகையில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.THUKKARAM COMPUTERS என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. வரிசை எண்.1–ல் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்.4541/2019/இ2 )

**தீர்மான எண்:–1038 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:15**

திருவள்ளூர் நகராட்சியில், 2020–2021 –ம் ஆண்டு பொது நிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 10.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்பெயர் | மதிப்பீடு வீதம் சதவிகிதத்தில் குறைவு/அதிகம் மதிப்பீடு தொகை குறைவு/அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தகுதி ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி (ம) ஆழ்துளைக் கிணறு பகுதியில் உள்ள பம்பு அவுஸ்களில் இயக்கி வரும் குளோரினேசன் இயந்திரத்திற்கு சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் (Liquid Chlorine) சப்ளை செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.80 | M/s.SRI SABARI ENGINEERING | 0.51% குறைவு | M/s.SRI SABARI ENGINEERING |
| | | | M/s.SRI RAJAGANAPATHY ENGINEERING | 1.07% அதிகம் | |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிடுகையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.SRI SABARI ENGINEERING என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. வரிசை எண்.1–ல் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தாவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண்.4541/2019/இ2 )

**தீர்மான எண்:–1039 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:16</u>**

DBC பணியாளர்களை 'ஆ' பிரிவின் மூலம் நகர் மன்ற தீர்மான எண். 701 நாள்.29.05.2019–ன்படி நீட்டிக்கப்பட்டது மேலும் தேசிய பேரிடர் கொரோனா (COVID 19) சம்மந்தமாக தொடர்ந்து தீவிர பொது சுகாதார பணி மேற்கொள்ள தேவைப்படுவதாலும் ஏற்கனவே மார்ச் 2020 வரை மன்ற ஒப்புதல் பெற்றுள்ள நிலையில் மேலும் ஏப்ரல் 2020 முதல் செப்டம்பர் 2020 வரை நீட்டித்து உத்திரவு வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்2677/2018/எச்1)

**தீர்மான எண்:–1040 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:17</u>**

திருவள்ளூர் நகராட்சிப்பகுதிகளில் "கொரானா வைரஸ்" (COVID-19) தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோவில் ஒலி பெருக்கி மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல் மற்றும் ஆட்டோவில் ஒலி பெருக்கியுடன் கபசுர குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.19.80 லட்சத்திற்கு, பணி மேற்கொள்ள 08.06.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது விபரம்

| | | | |
|---|---|---|---|
| | | **Hire charges for Auto awareness including Driver salary fuel charges etc. (Per** | **procoving mike set arrangement with announcement including labour charges, hire charges and** |

| | | Auto /Per Day) (Rs.) | battery etc, (Per Day) |
|---|---|---|---|
| 1 | எஸ்.பழனி<br>க எண்.44,<br>ரங்கநாதன் தெரு,<br>ஜவகர் நகர்,<br>திருவள்ளூர் | ரூ.1050/–<br>+ 12% GST | ரூ.655/–<br>+ 12% GST |
| 2 | பி. ஜோதி,<br>க எண்.17,எம் ஜி ஆர் நகர், பெரியகுப்பம்,<br>திருவள்ளூர் | ரூ.1000/–<br>+ 12% GST | ரூ.650/–<br>+ 12% GST |
| 3 | பி. வேணுகோபால்<br>க எண்.20,<br>மேட்டுத்தெரு, லட்சுமி புரம், திருவள்ளூர் | ரூ.1040/–<br>+ 12% GST | ரூ.654/–<br>+ 12% GST |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஜோதி என்பவரின் விலைப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஜோதி என்பவரின் விலைப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்
3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிமேற்கொள்ள மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்

(ந.க.எண்.1704/2020/அ1)

**தீர்மான எண்:–1041 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:18**

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7–ல் உள்ள சத்தியமூர்த்தி தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.4.60 இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1211/2020/இ1)

**தீர்மான எண்:–1042 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:19**

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17–ல் உள்ள சேலை ரோடு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1169/2020/இ1)

**தீர்மான எண்:–1043 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்:20

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு கூட்டத்திற்கு வருவதால், அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனையின் வளாகத்தில் உள்ள அம்மா உணவகத்திற்கு Renuval Sticker அமைக்கவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருவள்ளூர்

மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு திட்டப்பணிகளின் சாதனைகள் மற்றும் கொரனா நோய்க்கு இம்மாவட்டத்தில் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் குறித்து புகைப்படங்கள் பொருத்த Flex Board அமைக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1248/2020/இ1)

**தீர்மான எண்:–1044 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:21**

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26–ல் உள்ள பெரியகுப்பம் நகராட்சி பள்ளி கட்டிடத்தினை பழுது நீக்கம் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து கல்வி நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1088/2020/இ1)

**தீர்மான எண்:–1045 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:22**

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட இராஜாஜி சாலை, நகராட்சி பள்ளியில் கழிவறை கட்டும் பணி ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதி மற்றும் கல்விநிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1247/2020/இ1)

**தீர்மான எண்:–1046 மன்ற அனுமதி வழங்கலாம்.**

**பொருள் எண்:23**

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட முகமதலி தெரு, நகராட்சி பள்ளியில் கழிவறை கட்டும் பணி ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதி மற்றும் கல்விநிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1247/2020/இ1)

**தீர்மான எண்:–1047 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:24**

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 ராஜாஜி சாலை நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் போதிய மின்சார வசதி இல்லாத காரணத்தினால் மாணவர்கள் நலன் கருதி மின்சார வசதி ஏற்படுத்தித்தர ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதி மற்றும் கல்வி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1247/2020/இ1)

**தீர்மான எண்:–1048 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்:25

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியகுப்பம் பகுதியில் உள்ள மகப்பேறு மருத்துவமனையினை பழுது நீக்கம் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண்.1247/2020/இ1)

**தீர்மான எண்:–1049 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்:26

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட முகமது அலி தெரு நகராட்சிப்பள்ளியில் 2019 – 2020–ம் ஆண்டு பொதுநிதி மற்றும் கல்விநிதியின் கீழ், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைத்தல் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண். 1247/2020/இ1)

**தீர்மான எண்:–1050 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்:27

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4–ல் உள்ள பொன்னப்பன் தெரு, கந்தப்பன் தெரு பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.7.60 இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண்.1269/2020/இ1)

**தீர்மான எண்:–1051 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

ஆணையர்
திருவள்ளூர் நகராட்சி